1974 மார்ச் 14]

(இ) 1973-74-ம் ஆண்டிலும், 1974-75-ம் ஆண்டிலும் கிராமப் பணித் திட்டத்தின்கீழ் சாலை மற்றும் குடிநீர் திட்டத்தை முத்துரெங்கம் பட்டி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் செயல்படுத்த கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பணியைத் தொடங்குவதற்கு ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்ருல் இனிமேலாவது ஒதுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் எடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு இந்த ஆண்டு அந்த வேலைத்திட்டம் முடியும் நிலையில் இருக்கிறது.

பார்வதிபுரம் பகுதியில் குடிநீர் வழங்கல்.

*428 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி நகரம், பார்வதிபுரம் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் பஞ்சத்தைப் போக்க வேண்டி பொதுமக்களிடமிருந்து 1973 செப்டம்பர் மாதத்தில் நிர்வாக அதிகாரிக்கு மனு ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் :

(அ) ஆம்.

(இ) பார்வதிபுரம் பகுதியில் உள்ள கேணிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வரண்டு இருந்தமையால் தாற்காலிகமாக அப்பகுதியில் உள்ள மக்களுக்கு தண்ணீர் கிடைக்கும் பொருட்டு அதன் அருகாமையில் உள்ள தா. பேட்டை ரோடில் உள்ள தண்ணீர் போதிய வசதி உள்ள பெரிய கேணியில் தண்ணீர் இறைத்துக் கொள்வதற்கு ஏற்ப நான்கு மர உருளைகள் பொருத்தப்பட்டு குடிமக்கள் தண்ணீர் தாராளமாக எடுத்துக் கொண்டிருக்கிறுர்கள்.

முசிறி பேரூராட்சி எல்லைக்குள் காவேரியிலிருந்து குழாய் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் சம்பந்தமாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் வேலை ரூபாய் 1,31,250 மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி கோட்டப் பொறியாளரினுல் மேற்கொள்ளப்பட்டு துரிதமாக நடந்து கொண்டு வருகிறது. சம்பந்தப்பட்ட வேலை முடியும் தருவாயில் உள்ளது. பார்வதிபுரம் பகுதியில் உள்ள கேணியில் தண்ணீர் இல்லாமலிருப்பதால்

அப்பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு காவேரி யிலிருந்து குழாய் மூலம் கொண்டு வரும் திட்டத்தின்கீழ் பம்பின் மெயின் இழுத்து தண்ணீர் சப்ளை செய்வதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் பொதுமக்களிடமிருந்து நன்கொடை மூலம் தொகை வசூல் செய்து பார்வதிபுரம் பகுதிக்கு குடிதண்ணீர் சப்ளை செய்யவும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வரப்படுகிறது என்றும் திருச்சி மாவட்ட ஆட்சியாளருக்கு முசிறி பேரூராட்சி நிர்வாக அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முசிறி நகரத்தி லுள்ள பார்வதிபுரம் நகர பஞ்சாயத்திற்கும் சம்பந்தப்பட்டதுதான். குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் ஏன் இந்தப் பகுதி சேர்க்கப்பட வில்லை. இனிமேலாவது சேர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா? பண வசதியில்லையென்றால் கடனுகவாவது கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வீடுகளுக்கு மட்டும் அவர்கள் தண்ணீர்க்குழாய் பொருத்திக் கொள்ள விரும்பினால் அதற்காக நன்கொடை வழங்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அதைப்போலவே பார்வதி புரத்திற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர்களுக்கு இணைப்பு கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. இணைப்பு கொடுக்கப்படும்.

ஆலயங்களில் சமுதாயப் பணிகள்.

* 429 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள கோவில்களில் அதிக வருமானம் உள்ள கோவில் எது ?

(இ) மேற்படி கோவிலிலிருந்து சமுதாயப் பணிக்கு ஆண்டு தோறும் எவ்வளவு செலவிடப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) மதுரை மாவட்டம், பழனி, அருள்திரு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்.

(இ) மேற்படி திருக்கோயிலிலிருந்து சமுதாயப் பணிக்காக 1970–71, 1971–72, மற்றும் 1972–73 ஆண்டுகளில் முறையே ரூ. 10,61,535, ரூ. 13,27,199 மற்றும் ரூ. 13,39,278 செலவிடப்பட்டுள்ளது.